சுருக்கம்

சிறுபான்மையினர் நலன்– அனைத்து கிறித்தவப் பிரிவினரையும் உள்ளடக்கிய கிறித்தவர்கள் புனித ஸ்தலமான ஜெருசலேம் சென்று வர நிதி உதவி அளிக்கும் திட்டம் 2012–13 ஆம் ஆண்டிற்கான ரூ.1.00 கோடியை விடுவித்து ஆணைகள் வெளியிடப்படுகிறது.

---

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (சிந.ஆபி)த் துறை

அரசாணை (நிலை) எண் 101

நாள் 1.11.2013
திருவள்ளுவர் ஆண்டு 2044
விஜய, ஐப்பசி 15,

படிக்கப்பட்டது :–

1. அரசு ஆணை (நிலை) எண்.120, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள் 25.12.2011.
2. சிறுபான்மையினர் நல ஆணையரின் கடித எண் 4328/டிஎம்4/2011, நாள் 7.12.2012 மற்றும் 29.8.2013.

* * * * * * *

ஆணை:–

மேலே படிக்கப்பட்ட அரசாணையில், கிறிஸ்தவர்கள் புனித தலமான ஜெருசலேம் சென்று வர நிதி உதவி அளிக்கும் திட்டம் 2011–12 ஆம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்டு அவ்வாறே ஒரு பயனாளிக்கு ரூ.20,000/– வீதம் ரூ.1.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிடப்பட்டது.

2. இத்திட்டத்தின்படி 2011–12ல் ஒதுக்கப்பட்ட ரூ.1.00 கோடி மற்றும் 2012–13 ஆம் ஆண்டிற்கான ரூ.1.00 கோடியை எதிர்நோக்கியும் 891 பயனாளிகள் ஜெருசலேம் புனிதப்பயணம் மேற்கொண்டுள்ள நிலையில், 891 நபர்களுக்கான மொத்த செலவினத்தில் நிலுவையில் உள்ள விடுவிக்கப்பட வேண்டிய தொகையான ரூ.82,80,000/–க்கான செலவினத்தை மேற்கொள்ள ஏதுவாக 2012–13 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட ரூ.1.00 கோடியை விடுவிக்குமாறு தற்போது சிறுபான்மையினர் நல ஆணையர் அரசைக் கோரியுள்ளார்.

3. சிறுபான்மையினர் நல ஆணையரின் செயற்குறிப்பை அரசு நன்கு ஆய்வு செய்து 2011–2012 மற்றும் 2012–2013 –ல் புனிதப்பயணம் மேற்கொண்ட 891 பயனாளிகளுக்கு உரிய செலவினத்தை வழங்க ஏதுவாக 2013–14–ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் 500 கிறித்தவர்கள் ஜெருசலேத்திற்கு புனிதப்பயணம் மேற்கொள்வதற்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ.1,00,00,000/– (ரூபாய் ஒரு கோடி மட்டும்) விடுவித்து அரசு ஆணையிடுகிறது.

4. மேலும் 2013–14 ஆம் ஆண்டிற்கான புனிதப்பயணம் மேற்கொள்ளும் பயனாளிகளுக்கான நிதித் தேவையைப் பொறுத்தவரையில், அவர்களுக்கான புனிதப்பயண

நடைமுறைகள் நிறைவு செய்யப்பட்ட பின்னர் நிதி ஒப்பளிப்பு கோரி அரசுக்கு தனியாக கருத்துருவினை அனுப்புமாறு சிறுபான்மையினர் நல ஆணையர் கேட்டுக் கொள்ளப் படுகிறார்.

5. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத் தொகை கீழ்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும்:–

> "2235. சமூகப் பாதுகாப்பும் நலனும் – 60. ஏனைய சமூகப் பாதுகாப்பு நலத் திட்டங்கள் – 800. ஏனைய செலவு – I திட்டத்தில் சேராதது – AV கிறிஸ்தவர்கள் ஜெருசலேம் புனித பயணம் மேற்கொள்ள அரசு உதவித் தொகை – 09. உதவித் தொகை – 03. குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை."
>
> (த.தொ.கு. 2235 – 60 – 800 – AV -0932)

6. மேலே பத்தி–3–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை ஆணையர், சிறுபான்மையினர் நலம் அவர்கள் பெற்று, மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் அவர்களுக்கு பணமாக வழங்கப்படாமல் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் கீழ்காணும் தன்வைப்புக் கணக்குத் தலைப்பில் காசோலை / வரைவோலை மூலம் எதிர் வரவாக (Contra credit) வரவு வைக்கப்படவேண்டும்.

(k) Deposits and Advances
(b) Deposits not bearing interest.
8443 00 Civil Deposit
800 other Deposit
DF Deposits of Tamil Nadu Minorities Economic Development Corporation (TAMCO).
(DPC 8443 00 800 DF 000A) (Receipt)
(DPC 8443 00 800 DF 0000) (Outgo)

7. மேலும், இச்செலவினம் மேற்கொள்ளப்பட்டவுடன் பயனீட்டுச் சான்றிதழை (Utilisation Certificate) உரிய காலத்தில் அரசுக்கு அனுப்பி வைக்குமாறு சிறுபான்மையினர் நல ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. இவ்வாணை நிதித்துறையின் இசைவினை அதன் அ.சா. எண் 60490/பி,மி.பி/2013, நாள் 30.10.2013–ல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. அருள்மொழி,
அரசு முதன்மைச் செயலர்

<u>பெறுநர்</u>

சிறுபான்மையினர் நல ஆணையர், சென்னை–2.
மாநில கணக்காயர், சென்னை–18.
மாநில கணக்காயர்,(தணிக்கை I & II), சென்னை–18.
சம்பள கணக்கு அலுவலர், சென்னை–5.
சம்பள கணக்கு அலுவலர், சென்னை–9.

<u>நகல்</u>
முதன்மைச் செயலர்/ ஆணையர்,
பிற்படுத்தப்பட்டோர் நலம், சென்னை–5
ஆணையர்,
மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலம், சென்னை–5
முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9.
பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதித்(பிந/வ.செ.பொது.I / வ.செ.பொது.II) துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு/உபரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்